1978 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :

(அ) 1976–77 ஆம் ஆண்டில் நமது மாநிலத்திலுள்ள துறைமுகங்களிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட நூக்க மரத்தின் மதிப்பு ரூ. 8,92,228 ஆகும்.

(ஆ) தமிழகத்திலிருந்து நூக்க மர ஏற்றுமதியை அதிகப் படுத்தும் வாய்ப்பு இல்லை.

திரு. எஸ். கணேசன் : இந்த நூக்கு மரங்கள் தமிழகத்தில் எந்த மாவட்டத்திலே அதிகமாக இருக்கிறது? இப்படி ஏற்று மதி செய்யப்பட்ட நூக்கு மரத்தின் மூலமாக அரசுக்கு லாபம் வந்திருக்கிறதா? அரசுக்கு அதிக லாபம் வந்திருந்தால் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி மற்ற மாவட்டங்களிலும் நூக்குமரத்தை விளைவித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த நூக்குமரங்கள் அதிகமாக மழை பெறும் காடுகளில் தான் விளைகின்றன. ஆகவே மழை அதிகம் பெறும் காடுகள் மாநிலத்தில் எந்த எந்த மாவட்டங்களில் இருக் கின்றதோ அந்த மாவட்டங்களில் எல்லாம் இந்த மரங்கள் வளர்க்கப்படுகின்றன. இப்படி விளைவிப்பதால் அரசுக்கு லாபம் ஏற்பட்டு இருக்கிறதா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அதற்கான விளக்கக் குறிப்பு என்னிடம் இல்லை.

(2) ஒழுங்குப் பிரச்சினை.

விளுப்பட்டியலில் உள்ள வரிசை எண்களில் உள்ள மாற்றம் குறித்து.

திரு. எஸ். ஆர். இராதா : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்தில் கொடுக்கப்பட்டி ருக்கிற இந்த வினாப் பட்டியலிலே முதல் பக்கத்தில் 752-வது எண்ணுள்ள வினா இருக்கிறது. அதற்குப் பின்னால் 758-வது எண் ணுள்ள வினாதான் இருக்கிறது. இடையில் உள்ள கேள்விகள் எல்லாம் இல்லை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிறு தவறு நடந்திருக்கிறது. அதை ஒரு பெரிய தவறாக எடுத்துக் கொள்ளலாமா? பிரின்டிங் எர்ரர் என்பதைப் போல் அது சிலிப் எர்ரர்தான், பேப் பரிலே அதை இணைக்க மறந்திருக்கலாம். அதிலே ஒன்றும் ஒழுங் குப் பிரச்சினை இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS